கள்) மாண்டார்கள் என்பானேன். எதற்காக மாளவேண்டும்? ஆளவேண்டும் என்பதுதான் விருப்பம். அதையெல்லாம் ஆராய்ந்து வருகிறார்கள். அதோடு இடைக்கால நிவாரணமும் ட்ராவலிங் அலவன்சும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கே பல லட்சம் ரூபாய் ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். பே கமிஷன் ரிபோர்ட் வருவதற்கும் ரொம்ப காலம் ஆகாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் ரிபோர்ட்டை அனுப்புவார்கள்.

Service conditions of Village Officers

* 167 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to revise the Rules and Regulations governing the service conditions and appointments of the Village Officers; and

(b) if so, when they could be expected to be published ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) அவை விரைவில் பிரசுரிக்கப்படும்.

Dr. H. V. HANDE : Sir, is it not a fact that 342 employees from the South Arcot district and 28 employees from Uthamapalayam in the Madurai district were retrenched from the Village Officers' posts vide G.O. Ms. No. 2034, Revenue, dated 23rd October 1963? Also, even the stay order issued by the Government has not been implemented by the Collectors of South Arcot and Madurai districts and what is the follow-up action taken by the Government ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir. I want notice.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் இவர்களே, இவர்களை முழு நேர ஊழியர்களாக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ? அதற்கான விதிகள் பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியகழன் : அதைத் தான் மூலக் கேள்வியிலேயே சொன்னேன். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டுப் படி, வம்சாவளி நியமனம் செல்லாது என்று ஆகிவிட்டது. புது சட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில்,

Tamil Nadu Village Officers Rules :

Tamil Nadu Village Officers, Conduct Rules; and

Tamil Nadu Village Officers, Classification, Control and Appeal Rules.

என்று விதிமுறைகளைத் தயாரித்து வருகிறார்கள். விரைவிலேயே அது பற்றி அறிவிக்கப்படும். முழு நேர ஊழியர்களாக்கும் நிலை பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுத்தவுடன், அவைக்கு அறிவிக்கப்படும்.